1980 ஆகஸ்ட் 1]

கள்ளக்குறிச்சி பகுதியில் காகித ஆலை ஏற்படுத்தல்.

*வினா எண் 97—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாககளுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறுச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வீணாகும் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் வகையில் காகித ஆலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா :

(ஆ) ஆம் எனில். எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் மிகவும் பின் தங்கிய பகுதி, பின் தங்கிய மக்கள் அதிகமாக வாழும் அந்தப் பகுதிகளில் தொழில் முன்னேற்றம் அவசியம் தேவை. ஆகையினால் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வீணாகும் சக்கைகளை வைத்து காகிதம் தயாரிக்கும் ஆலையை விரைவில் ஏற்படுத்தும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் சர்க்கரை ஆலையின் பக்கத்தில் யூனிட் பிளாட் ஒன்றை காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலைக்காக ஆரம்பித்து, அதை ஒரு முன்னோடி திட்டமாக எடுத்துக் கொண்டு நடத்தி, அதன் விளைவினைப் பார்த்து பிறகு ஒவ்வொரு சர்க்கரை ஆலைகளின் பக்கத்திலும், இப்படி ஒரு காகித ஆலையை துவங்கலாம் என்ற வகையில் அரசு யோசித்து வருகிறது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிச்சயமாக கவனிக்கப்படும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்மாதிரியாக மதுராந்தகம் சர்க்கரை ஆலையின் அருகில் ஆரம்பித்து அதற்குப் பிறகு எல்லா சர்க்கரை ஆலைகளுக்கும் பக்கத்தில் காகித தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மதுராந்தகம் காகித ஆலை திட்டம் எப்பொழுது துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை நவம்பர், டிசம்பர் 1981-ல் தன் உற்பத்தியை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப் பெற்றது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு காகித ஆலையை ஏற்படுத்தும் திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த திட்டம் எந்த மாவட்டத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

பதில் —இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பற்றி. மூலக் கேள்வியை ஒட்டி யாரும் உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் விருத்தாசலம் சர்க்கரை ஆலையின் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய கரும்புக்கான பாக்கியை கொடுக்காமலேயே இருக்கிறார்கள். இப்படி இரண்டு மூன்று ஆண்டுகளாக பாக்கி நிற்கிறது. அவர்களுக்கு பாக்கியை கொடுக்கும் வகையில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

பதில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தியாகராசன் அவர்கள் அதை விவசாய அமைச்சரிடம் கேட்க வேண்டும். மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள் என்று நான் முன்பே சொன்னேன்.

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கும் சர்க்கரை ஆலையில் வீணாகும் கரும்புச் சக்கைகளிலிருந்து காகித ஆலை ஒன்றை கள்ளக் குறிச்சியில் அமைக்கும் திட்டத்தை அரசு விரைவில் செயல்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

பதில்—இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியே அது தான்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்பு ஆலையின் கழிவுகளிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் திட்டத்தை

1980 ஆகஸ்ட் 1]

முன்னோடியாக மதுராந்தகத்தில் ஏற்படுத்தப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு மற்ற ஆலைகளுக்கும் அதை விரிவு படுத்தும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் ஆலைக்கு பக்கத்தில் காகித ஆலையை நிறுவும் திட்டத்தை முன்னோடியாக எடுத்துக்கொண்டு, செயல்படுவதின் திறனைப்பார்த்து, அதன் பலனைப் பார்த்து, பிறகு எங்கெங்கு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் காகித ஆலைகள் வைக்கும் வகையில் அரசு ஆலோசித்து வருகிறது என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வெளிவரும் கரும்புச் சக்கையிலிருந்து காகித ஆலை ஏற்படுத்தும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோல், தஞ்சாவூர் மாவட்டத்தில் வடபாதிமங்கலத்தில் இருக்கிற சர்க்கரை ஆலைகளிலிருந்தும் ஏராளமான கரும்புச் சக்கைகள் கழிவுப் பொருளாக வெளியேறுகின்றன. அங்கே வைக்கோலும் அதிக அளவில் கிடைக்கிறது. ஆகவே அங்கேயும் காகித ஆலைகளை ஏற்படுத்தும் அளவில் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் ஏற்கனவே திருப்பித் திருப்பிச் சொல்லிவிட்டேன். மதுராந்தகம் சர்க்கரை ஆலையின் பக்கத்தில் ஏற்படுத்தப்படும் இந்தக் காகித தொழிற்சாலையின் பலனைப் பார்த்து, எங்கெங்கு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் காகிதத்தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான முறையில் அரசு ஆலோசிக்கும் என்று மொத்தமாகவே சொல்லிவிடுகிறேன்.

சலவைத்தொழிலாளர்களுக்கு நியாய விலையில் சலவைப் பொருட்கள் வழங்கல்.

(*வினா எண். 88)— திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சலவைத் தொழிலாளர்களுக்கு, காரம், நீலம், பிளிச்சிங் பவுடர், டினோபால் முதலிய பொருட்கள் சூப்பர் மார்க்கட் மூலம் நியாய விலையில் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?